# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா. 13 நாள் 10.03.2026

| CC. No. | 238/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | ச.மதிவாணன் | த/பெ. | ப. சக்கரபாணி |
| வயது | 65 | தொழில் | ஓய்வுபெற்றவர் அரசு |
| கிராமம் | [illegible] | தாலுக்கா | [illegible] |

(எதிரி ஆஜர்,).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் தற்போது கூட்டுறவு சங்க துணை பதிவாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்றுவிட்டேன். நான் இதற்கு முன் மயிலாடுதுறை கூட்டுறவு சரக துணை பதிவாளர் அலுவலகத்தில் கூட்டுறவு சார்பதிவாளர் (பண்டகசாலை) ஆக பணிபுரிந்து வந்த போது மயிலாடுதுறை நுகர்வு கூட்டுறவு மொத்த கூட்டுறவு பண்டகசாலையின் மயிலாடுதுறை மெயின் கிளையில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக தமிழ்நாடு கூட்டுறவு சட்டம் 1983-ம் வருடத்திய பிரிவு 81-ன் கீழ் விசாரணை நடத்த மயிலாடுதுறை கூட்டுறவு சரக துணை பதிவாளர் அவர்கள் செயல்முறை ஆணை எண்.131/2014க, நாள் 03.04.2014-ன் படி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு விசாரணை அலுவலராக மயிலாடுதுறை கூட்டுறவு சார்பதிவாளர் பண்டகசாலையாக பணிபுரிந்த திரு.ச.மதிவாணன் ஆகிய எனக்கு உத்தரவிடப்பட்டது. தாங்கள் என்னிடம் காண்பிப்பது எனக்கு உத்தரவிடப்பட்டதற்கான ந.க.எண்.131/2014க, நாள் 03.04.2014 செயல்முறை ஆணை ஆகும் (அது ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). நான் கூட்டுறவு சார்பதிவாளர் (வழக்கு) ஆக பணிமாற்றம் செய்யப்பட்டு பிரிவு 81 விசாரணையினை 07.04.2017 தேதியில் துவங்கி பல்வேறு தேதிகளில் விசாரணை செய்து முடிக்க இயலாத காரணத்தினால் மேலும் காலநீட்டிப்பு பெற்றேன். தாங்கள்

CJM, MAYILADUTHURAI.

காட்டும் அந்த கால நீட்டிப்பு ஆணை ந.க.எண்.131/2014க, நாள் 04.09.2014 செயல்முறை ஆணை ஆகும் (அது ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). அதன்படி 27.09.2014-ல் விசாரணையை முடித்து பண்டகசாலை மருந்தக பிரிவு மருந்தாளுநர் மகாலெட்சுமி விற்பனை உதவியாளர் ஆரோக்கியராஜ், உதவியாளர் நடராஜன் மற்றும் விற்பனையாளர் S.சித்ரா ஆகியோர் மீது எடுக்கப்பட வேண்டிய குற்றவியல் நடவடிக்கை தொடர்பான பிரிவு 81 விசாரணை அறிக்கையினை 27.09.2014 தேதியில் சமர்பித்துள்ளேன். தாங்கள் காண்பிப்பது நான் துணை பதிவாளர் மயிலாடுதுறை அவர்களுக்கு சமர்பித்த 29.09.2014 தேதியிட்ட 81 விசாரணை அறிக்கை ஆகும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.21** ஆகும்.

என்னுடைய விசாரணை அறிக்கையில் முதல் இனத்தில் மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலையின் மருந்தக பிரிவில் பணிபுரிந்த மருந்தாளுநர் மகாலெட்சுமி விற்பனை உதவியாளர் ஆரோக்கியராஜ், உதவியாளர் நடராஜன் ஆகியோர் கடந்த 01.04.2011 முதல் 31.03.2012 வரை உள்ள காலத்தில் இருப்பு குறைவு ஏற்படுத்தியும் இருப்பு குறைவினை மறைப்பதற்கான போலியான கொள் முதல் திருப்பம் என்ற பட்டியல்களை ரூ.12,88,823.14/- தயாரித்து சமர்பித்தும் கூடுதல் ரூ.11,56,050.07/- பைசா கையாடல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளேன். 2-வது இனத்தில் மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலையின் மருந்தக பிரிவில் பணிபுரிந்த மருந்தாளுநர் மகாலெட்சுமி மற்றும் விற்பனை உதவியாளர் ஆரோக்கியராஜ் ஆகிய இருவரும் கடந்த 01.04.2012 முதல் 31.03.2013 வரை உள்ள காலத்தில் இருப்பு குறைவு ஏற்படுத்தியும் கடந்த 09.10.2012 தேதியில் திருவெண்காடு ஆரம்ப சுகாதார நிலையத்தின் பெயரில் ரூ.1,98,000/-க்கு போலியான கடன் விற்பனை பில் தயாரித்தும், அவர்களே இந்த கடன் விற்பனையில் ரூ.48,000/-ஐ தன்னிச்சையாக செலுத்தியும் முறைகேடு செய்துள்ளனர். எனவே 2012-13ம் ஆண்டில் எதிரிகளால் ஏற்படுத்திய இருப்பு குறைவு மதிப்பு கூடுதல்

CJM, MAYILADUTHURAI.

ரூ.25,43,561.82/– பைசா கையாடல் செய்துள்ளதில் போலி கடன் விற்பனை மோசடி ஒரு பகுதியாக உள்ளது என தெரிவித்துள்ளேன். 3–வது இனத்தில் மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலையின் மருந்தக பிரிவில் பணிபுரிந்த மருந்தாளுநர் மகாலெட்சுமி மற்றும் விற்பனை உதவியாளர் ஆரோக்கியராஜ் ஆகிய இருவரும் கடந்த 01.04.2013 முதல் 30.09.2013 வரை உள்ள அரையாண்டிற்கான காலத்தில் இருப்பு குறைவு ஏற்படுத்தி கூடுதல் ரூ.3,96,220.72/– பைசா கையாடல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளேன். 4–வது இனத்தில் மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலையின் மருந்தக பிரிவில் பணிபுரிந்த விற்பனையாளர் சித்ரா மற்றும் விற்பனை உதவியாளர் ஆரோக்கியராஜ் ஆகிய இருவரும் கடந்த 01.10.2013 முதடலவ 27.01.2014 வரை உள்ள காலத்தில் இருப்பு குறைவு ஏற்படுத்தி கூடுதல் ரூ.2,65,922.89/– பைசா கையாடல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளேன். ஆகவே, எதிரிகள் திட்டமிட்டு கூட்டாக சேர்ந்து குற்ற நோக்குடன் நம்பிக்கை மோசடி செய்து இருப்பு குறைவு ஏற்படுத்தியுள்ளதால் தொடர்புடைய ஆவணங்களுடன் குற்ற நடவடிக்கை தொடர பரிந்துரைத்து பிரிவு 81 விசாரணை அறிக்கையை சமர்பித்தேன்.

பிரிவு 81 விசாரணை அறிக்கையின் படி காவல் துறை புலன் விசாரணை மேற்கொண்டதில் எனது விசாரணையில் சமர்பித்த குற்ற நிகழ்வுகள் அனைத்தும் உண்மையானவை என்பதையும், அவை கீழ்க்கண்ட 05 இனங்களாக பிரிக்கப்பட்டு எதிரிகளின் குற்ற செயல்கள் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதை தெரிந்து கொண்டேன்.

முதல் எதிரி மகாலெட்சுமி மயிலாடுதுறையில் உள்ள T–917 மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் மருந்தக பிரிவின் மருந்தாளுநர் ஆவார். மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் தனி அலுவலரின் செயல்முறை ஆணை நாள் 01.10.2010–ன் படி மேற்படி பண்டக சாலையின் மருந்தக பிரிவிற்கு 01.12.2010 முதல் மருந்தாளுநராக நியமிக்கப்பட்டு கொள்முதல், விற்பனை மற்றும் காலாவதியான மருந்துகளை திருப்பம் செய்தல், உரிய பதிவேடுகள் பராமரித்தல் போன்ற

CJM, MAYILADUTHURAI.

இதர பணிகளும் இவரது கடமைகளும் பொறுப்புகளுமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன அதன்படி மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் மருந்தக பிரிவிற்கு இவரே முழு பொறுப்பாவார். மேலும் பண்டக சாலையின் தனி அலுவலர் / மேலாண் இயக்குநர் கட்டுப்பாட்டுகளுக்கு உட்பட்டும் மருந்தக சட்ட திட்டத்தின் படியும் இவர் பணிபுரிய கடமைப்பட்டவர் ஆவார்.

2-ம் எதிரி ஆரோக்கியராஜ் மயிலாடுதுறையில் உள்ள T-917 மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் மருந்தக பிரிவின் விற்பனை உதவியாளர் ஆவார். இவர் Security Service மூலம் ஒப்பந்த அடிப்படையில் தினக்கூலியாக 11.10.2019-ல் இயக்கப்பட்டு மருந்தாளுநருக்கு உதவியாக விற்பனை செய்வதற்கும் கொள்முதல் பட்டியல் மற்றும் விற்பனை பட்டியல் தயாரித்தல், சிட்டா மற்றும் கொள் முதல் திருப்ப பதிவேடு எழுதுதல் மற்றும் கணினி பதிவுகள் மேற்கொள்ளுதல் போன்ற பணிகளை செய்து சம்பளம் வாங்கியதற்காக Security Service பணியாளர்களின் சம்பள பட்டுவாடா பதிவேட்டில் கையெழுத்து போட்டு வந்துள்ளார்.

3-வது எதிரி நடராஜன் மயிலாடுதுறையில் உள்ள T-917 மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் உதவியாளர் ஆவார். மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் தனி அலுவலரின் செயல்முறை ஆணையினால் 07.10.2010-ன் படி மேற்படி பண்டக சாலையின் மயிலாடுதுறை மருந்தக பிரிவிற்கு 11.12.2010 முதல் இருப்பு பொறுப்பு சரிபார்ப்பு அலுவலராக நியமிக்கப்பட்டு மருந்து விற்பனை பிரிவின் பொறுப்பு பதிவேடு கணக்குகளை சரிபார்த்து இருப்பு குறைவு ஏற்படாதவாறு கண்காணிக்க முழு பொறுப்புடையவர் ஆவார்.

4-வது எதிரி சித்ரா மயிலாடுதுறையில் உள்ள T-917 மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் கூடுதல் பொறுப்பாளர் ஆவார். மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் தனி அலுவலரின் செயல்முறை ஆணையினால் 08.10.2013-ன் படி மேற்படி பண்டக சாலையின் மருந்தக

CJM, MAYILADUTHURAI.

பிரிவிற்கு 01.10.2013 முதல் கூடுதல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு 27.01.2014 வரை பணிபுரிந்துள்ளதில் கொள்முதல், விற்பனை மற்றும் காலாவதியான மருந்துகளை திருப்பம் செய்தல், உரிய பதிவேடுகள் பராமரித்தல் போன்ற இதர பணிகளையும் நிர்ணயிக்கப்பட்ட அலுவலக கோட்பாடுகளின் படியும் பண்டக சாலையின் பணியாளர் சிறப்பு துணை விதி எண்.4-ன் படியும் பண்டக சாலையின் தனி அலுவலர் / மேலாண் இயக்குநரின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு பணிபுரிய கடமைப்பட்டவர் ஆவார். மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் மருந்தக பிரிவிற்கு பணிபுரிந்த காலத்திற்கு இவரே முழு பொறுப்பாவார்.

முதல் இனத்தில் மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் மருந்தக பிரிவில் பணிபுரிந்த எதிரிகள் மகாலெட்சுமி, ஆரோக்கியராஜ், நடராஜன் போன்ற 01.04.2011 முதல் 31.03.2012 வரையிலான காலத்தில் மருந்து பொருட்களின் கொள்முதல், விற்பனை மற்றும் இறுதி இருப்பில் நிதி மோசடி செய்து இருப்பு குறைவு கீழ்க்கண்ட படி ஏற்படுத்தியுள்ளனர்.

01.04.2011 தேதியில் மருந்தக பிரிவின் ஆரம்ப இருப்பு (31.03.2011-ன் இருப்பு பரிசோதனை அறிக்கையின் படி மருந்து இருப்பு மதிப்பு ரூ.14,45,327.47/-. 01.04.2011 முதல் 31.03.2011 வரை ரொக்கம் மற்றும் கடன் மூலம் கொள் முதல் மதிப்பு (GRN Report & Abstract)-ன் படி ரூ.94,56,665.87/-. 01.04.2011 முதல் 31.03.2012 வரை மளிகை கிடங்கு மூலம் சரக்கு மாற்றம் மருந்து பிரிவுக்கு செய்ததில் (Debit Note & Abstract)-ன் படி ரூ.86,612/-. ஆக கூடுதல் ரூ.1,09,87,605.34/-.

01.04.2011 முதல் 31.03.2012 வரை மருந்து ரொக்க விற்பனை ரூ.68,48,448/- ரொக்க விற்பனை கழிவு 12 % (Cash Receipt, Sales Abstract & Discount) ரூ.8,46,279.50/-. 01.04.2011 முதல் 31.03.2012 வரை மருந்து கடன் விற்பனை ரூ.1,04,499.70/-. கடன் விற்பனை கழிவு 12% (Credit Bill & Abstract)-ன் படி ரூ.47,791.60/-. 01.04.2011 முதல் 31.03.2012 வரை

CJM, MAYILADUTHURAI.

கொள் முதல் திருப்பம் (Agency / விற்பனை பட்டியலின் படி பெற்ற கணினி அறிக்கை) ரூ.85,725.09/-. ஆக கூடுதல் செலவு ரூ.79,32,743.89/-. 31.03.2012 தேதியில் இறுதி இருப்பு இருக்க வேண்டியது ரூ.3,54,861.45/-. 31.03.2012 தேதியியில் இறுதி தணிக்கைக்காக இருப்பு சோதிக்கப்பட்டதின் மதிப்பு ரூ.19,01,403.89/-. 31.03.2012 தேதியில் இருப்பு குறைவு ஏற்படுத்தப்பட்டது ரூ.11,53,457.56/-.

பண்டக சாலையின் மருந்தக பிரிவில் பணிபுரிந்த எதிரிகள் மகாலெட்சுமி மற்றும் ஆரோக்கியராஜ் இருவரும் கூட்டாக சேர்ந்து 01.04.2011 முதல் 31.03.2012 வரையிலான காலத்தில் வரவு செலவுக்காக பதிவேடுகளை சரியாக பராமரிக்காமல் கொள் முதல் செய்த மருந்து பொருட்களில் காலாவதியான மருந்தினை 62 நிருவன மொத்த விற்பனையாளர்களுக்கு திருப்பி அனுப்பியதாக போலி பட்டியல் தயாரித்தும், கணினி மூலம் நகல் எடுத்தும் பொய் கையொப்பங்கள் செய்தும் 3-வது எதிரி நடராஜன் கொள் முதல் திருப்பம் மற்றும் காலாவதியான மருந்தினை திருப்புதல் என்ற வகையில் ரூ.12,88,823.14/- க்கு மற்ற எதிரிகள் சமர்பித்த போலியான பட்டியலை பெற்று சரக்கு இருப்பு குறைவினை மறைத்து சரக்கு இருப்பு மதிப்பினை குறைத்து காட்டுவதற்காக இவரால் கூடுதல் தொகையை குறைத்து எழுதி காண்பித்து உடந்தையாக இருந்துள்ளார். இதன்படி கையிருப்பு மருந்து மதிப்பு தொகை ரூ.11,53457.56/- கையாடல் செய்துள்ளனர். இக்குற்றத்தினை உறுதி செய்ய 31.03.2011 மற்றும் 31.03.2012 தேதிகளில் தணிக்கை சரக்கு இருப்பு அறிக்கை, ரொக்க கொள்முதல் பட்டியல்கள், சரக்கு மாற்றம் செய்த பட்டியல்கள், கடன் விற்பனை பில்கள், ரொக்க விற்பனை மற்றும் கழிவு பட்டியல்கள், விற்பனை தொகை செலுத்திய பட்டியல், கொள்முதல் திருப்பம் பட்டியல்கள் பதிவேடுகளுடன் மற்றும் மருந்து பெருவணிகர்களிடம் பெற்ற பிரிவு 81 விசாரணை வாக்குமூலங்கள் மற்றும் ரசீதுகள், முதல் மூன்று எதிரிகளிடம் பெற்ற வாக்குமூலங்கள் ஆகியவையும் மற்றும் அனைத்து பட்டியல்கள் தொடர்பாக Computer Abstract என்னால் சமர்பிக்கப்பட்டுள்ளனர். அந்த சரக்கு மாற்றம் செய்த

CJM, MAYILADUTHURAI.

பட்டியல்கள் 1 முதல் 44 பக்கங்கள் **அ.சா.ஆ.22** ஆகும். கடன் விற்பனை பில்களின் அடிகட்டைகள் புத்தகம் Volume 1 **அ.சா.ஆ.23** ஆகும். 01.04.2012 முதல் 31.03.2012 வரையிலான GRN Report (பக்கம் 1 முதல் 100) **அ.சா.ஆ.24** ஆகும். 01.04.2013 முதல் 30.09.2013 வரை GRN Report (பக்கம் 1 முதல் 28) **அ.சா.ஆ.25** ஆகும். 01.10.2013 முதல் 27.01.2014 வரை GRN Report (பக்கம் 1 முதல் 30) **அ.சா.ஆ.26** ஆகும். ரொக்க விற்பனை மற்றும் கழிவு பட்டியல்கள் 2011 முதல் 2014 வரை (பக்கம் 1 முதல் 24) **அ.சா.ஆ.27** ஆகும். மருந்தாளுநரின் கடமைகளும் பொறுப்புகளும் பற்றிய தனி அலுவலர் செயல்முறை ஆணை **அ.சா.ஆ.28** ஆகும். கடன் விற்பனை பில்களின் அடிகட்டைகள் புத்தகம் Volume 2 **அ.சா.ஆ.29** ஆகும். மகாலெட்சுமி மருந்தாளுநரின் 21.06.2014 வாக்குமூலம் **அ.சா.ஆ.30** ஆகும். ஆரோக்கியராஜ் மருந்தாளுநரின் 17.06.2014 வாக்குமூலம் **அ.சா.ஆ.31** ஆகும். நடராஜன் மருந்தாளுநரின் 19.06.2014 மற்றும் 12.09.2014 வாக்குமூலங்கள் முறையே **அ.சா.ஆ.32** மற்றும் **அ.சா.ஆ.33** ஆகும். கொள்முதல் திருப்பம் பட்டியல் 2011 முதல் 2014 வரையிலான காலங்கள் **அ.சா.ஆ.34** ஆகும். போலியான கொள்முதல் திருப்ப பட்டியல் 01.04.2011 – 31.03.2012 பக்கம் 1-176 **அ.சா.ஆ.35** ஆகும். கடன் விற்பனை கழிவு பட்டியல் 01.04.2011-27.01.2014 பக்கம் 1 முதல் 22 **அ.சா.ஆ.36** ஆகும். ரொக்க விற்பனை விவர பட்டியல் 1.04.2011-27.01.2014 பக்கம் 1 முதல் 32 **அ.சா.ஆ.37** ஆகும். கடன் விற்பனை பட்டியல் 1.04.2011-27.01.2014 பக்கம் 1 முதல் 14 **அ.சா.ஆ.38** ஆகும். Expiry Return Register பக்கம் 1 முதல் 52 **அ.சா.ஆ.39** ஆகும். மருந்தாளுநர் மகாலெட்சுமி என்பவர் விற்பனையாளர் சித்ராவிடம் ஒப்படைத்த பொறுப்பு ஒப்படைப்பு பட்டியல் பக்கம் 1-60 **அ.சா.ஆ.40** ஆகும். ஆரோக்கியராஜ் சம்பள பதிவேடு தொகுதி 1 மற்றும் தொகுதி 2 முறையே **அ.சா.ஆ.41** மற்றும் **அ.சா.ஆ.42** ஆகும். சித்ரா விற்பனையாளருக்கு அனப்பிய அழைப்பாணைகள் (3 எண்ணிக்கை) **அ.சா.ஆ.43** ஆகும்.

CJM, MAYILADUTHURAI.

மேலும் அசல் கொள் முதல் திருப்ப பதிவேடு விசாரணையின் போது என்னால் பின்னர் கைப்பப்பற்றப்பட்டு விசாரணை அறிக்கையுடன் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2-வது இனத்தில் மயிலாடுதுறையில் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் மருந்தக பிரிவில் பணிபுரிந்த எதிரிகள் மகாலெட்சுமி, ஆரோக்கியராஜ் ஆகியோர் 01.04.2012 முதல் 31.03.2013 வரையிலான காலத்தில் மருந்து கொள் முதல் விற்பனை மற்றும் இறுதி இருப்பில் நிதி மோசடி செய்து கீழ்க்கண்ட படி இருப்பு குறைவு ஏற்படுத்தியுள்ளனர்.

01.04.2012 தேதியில் மருந்தக பிரிவில் ஆரம்ப இருப்பு (31.03.2012-ன் தணிக்கை இருப்பு பரிசோதனை அறிக்கையின் படி ரூ.19,01,403.89/- 2012-2013-ம் ஆண்டும் க்கு 01.04.2012 முதல் 31.03.2013 வரை ரொக்கம் மற்றும் கடன் கொள் முதல் மதிப்பு (GRN Report & Abstract)-ன் படி ரூ.1,01,78,692.77/-. 2012-2013-ம் ஆண்டுக்கு 01.04.2012 முதல் 31.03.2013 வரை மளிகை கிடங்கு மூலம் சரக்கு மாற்றம் மருந்து பிரிவிற்கு செய்ததில் மதிப்பு (Debit Note & Abstract)-ன் படி ரூ.38,521/-. ஆகக் கூடுதல் வரவு ரூ.1,21,18,617.66/- 2012-2013-ம் ஆண்டுக்கு 01.04.2012 முதல் 31.03.2013 வரை ரொக்க விற்பனை ரூ.67,45,840/-. ரொக்க விற்பனை கழிவு 12% (Cash Receipt, Sales Abstract & Discount) ரூ.9,69,025.15/-. 2012 - 2013-ம் ஆண்டும் 01.04.2012 முதல் 31.03.2013 வரை கடன் விற்பனை ரூ.3,10,507.33/-, கடன் விற்பனை கழிவு 12 % (Credit Bill & Abstract) ரூ.1,96,928.18/-. 2012 - 2013-ம் ஆண்டும் 01.04.2012 முதல் 31.03.2013 வரை கொள் முதல் திருப்பம் (Agency / விற்பனை பட்டியலின் படி பெற்ற கணினி அறிக்கை) ரூ.1,29,793.38/-. ஆக கூடுதல் செலவு ரூ.83,52,094.04/-. 31.03.2013 தேதியில் இறுதி இருப்பு இருக்க வேண்டியது ரூ.37,66,523.62/-. 31.03.2013 தேதியில் இறுதி தணிக்கைகாக இருப்பு சோதிக்கப்பட்டதன் மதிப்பு ரூ.12,21,880/-. 31.03.2013 தேதியில் இருப்பு குறைவு ஏற்படுத்தியது ரூ.25,44,643.62/-.

CJM, MAYILADUTHURAI.

பண்டக சாலையின் மருந்தக பிரிவில் பணிபுரிந்த மேற்படி எதிரிகள் மகாலெட்சுமி மற்றும் ஆரோக்கியராஜ் இருவரும் கூட்டாக சேர்ந்து 01.04.2012 முதல் 31.03.2013 வரையிலான காலத்தில் வரவு செலவுக்கான பதிவேடுகளை சரியாக பராமரிக்காமலும் கொள் முதல், விற்பனை மற்றும் கொள் முதல் திருப்பம் ஆகியவற்றில் மோசடி செய்து வரவு செலவு கணக்கின் இருப்பு குறைவினை ஏற்படுத்தி 31.03.2013-ல் இறுதியாக இருக்க வேண்டிய கையிருப்பு தொகையில் ரூ.25,44,643.62/- பைசாவை கையாடல் செய்துள்ளனர். இக்குற்றத்தினை உறுதி செய்ய 31.03.2012 மற்றும் 31.03.2013 தேதிகளில் தணிக்கை சரக்கு இருப்பு அறிக்கை, ரொக்க கொள்முதல் பட்டியல்கள், சரக்கு மாற்றம் செய்த பட்டியல்கள், கடன் விற்பனை, ரொக்க விற்பனை மற்றும் கழிவு பட்டியல்கள், விற்பனை தொகை செலுத்திய பட்டியல், கொள்முதல் திருப்பம் பட்டியல்கள் பதிவேடுகளுடன் மற்றும் மருந்து பெருவணிகர்களிடம் பெற்ற பிரிவு 81 விசாரணை வாக்குமூலங்கள் மற்றும் ரசீதுகள், முதல் மூன்று எதிரிகளிடம் பெற்ற வாக்குமூலங்கள் ஆகியவற்றையும் அனைத்து பட்டியல்கள் தொடர்பான Computer Abstract யுடன் என்னால் சமர்பிக்கப்பட்டுள்ளனர்.

3-வது இனத்தில் 01.04.2012 முதல் 31.03.2013 வரை உள்ள காலத்தில் எதிரிகள் ஏற்படுத்திய இருப்பு குறைவு காரணமான அனைத்து ஆவணங்களையும் பிரிவு 81 விசாரணையில் பரிசீலனை செய்த போது மயிலாடுதுறையில் உள்ள நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் மருந்தக பிரிவில் மருந்தாளுநர் மகாலெட்சுமி மற்றும் உதவியாளராக இருந்த எதிரி ஆரோக்கியராஜ் என்பவர் கடந்த 09.10.2012 தேதியில் MO., GPHC, Thiruvenkadu பெயருக்கு ரூ.1,98,000/- மதிப்புக்கு மருந்துகள் கடன் விற்பனை செய்யப்பட்டதாக கடன் விற்பனை பில் 2947-ன் படி போலி விற்பனை பட்டியல் தயாரித்துள்ளதை தனது வாக்குமூலத்தில் ஒப்புக் கொண்டு தொடர்புடைய நிறுவனத்தினர் கடன் தொகையாக முன் பணம் ரூ.48,000/- கொடுத்ததாக முதல் எதிரி மகாலெட்சுமி உத்தரவின் படி 19.11.2012 தேதியில் பண்டக சாலையின்

CJM, MAYILADUTHURAI.

அலுவலகத்தில் எதிரி ஆரோக்கியராஜ் செல்லானில் கையெழுத்திட்டு செலுத்தியுள்ளார். இந்த கடன் விற்பனைக்கு MO., GPHC, Thiruvenkadu என்ற நிறுவனத்தின் தேவை பட்டியல் முறையாக பெறாமலும், கொள் முதல் பிரிவு கண்காணிப்பாளர் அனுமதி பெறாமலும் தன்னிச்சையாக போலியான விற்பனை பட்டியல் தயாரித்து அதன் வரவு செலவுகளை கணினியில் பதிவு செய்ய ஒப்படைத்தும் எதிரிகள் பண்டச சாலையின் பொருட்களை வெளியேற்றியுள்ளனர். எனவே, எதிரிகள் இருவரும் கடன் விற்பனை பட்டியல் போலியாக தயார் செய்தும், பதிவேடுகளை பராமரிக்காமல் மறைத்தும் பொய்யான கணக்கு விபரத்தினை கணினியில் பதிவு செய்ய ஒப்படைத்தும் நம்பிக்கை மோசடி செய்து பண்டக சாலையின் மருந்து பொருட்களை வெளியேற்றி ரூ.1,98,000/- கையாடல் செய்துள்ளனர். இக்குற்றத்தினை உறுதி செய்ய MO., GPHC, Thiruvenkadu என்பவரின் கடிதங்கள் PHCஅலுவலக வரவு செலவு குறிப்புகள் விற்பனை பட்டியல் எண். 2947 தொகை செலுத்திய செல்லான் பண்டக சாலை மருந்து பிரிவு வரவு செலவு கணினி குறிப்புகள் எதிரிகளிடமும் சாட்சிகளிடமும் பெற்ற பிரிவு 81 விசாரணை வாக்குமூலங்கள் 31.03.2013-ல் செய்த இருப்பு பரிசோதனை அறிக்கை ஆகியவை என்னால் சமர்பிக்கப்பட்டுள்ளனர்.

4-வது இனத்தில் மயிலாடுதுறையில் உள்ள மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் மருந்தக பிரிவில் பணிபுரிந்த எதிரி மகாலெட்சுமி 01.04.2013 முதல் 30.09.2013 வரையிலான காலத்தில் பணிபுரிந்து செப்டம்பர் 13 மாதம் மட்டும் பணிபுரிந்த எதிரி ஆரோக்கியராஜ் உடன் சேர்ந்து மருந்து பொருட்களின் கொள் முதல் மற்றும் விற்பனை மற்றும் இறுதி இருப்பில் நிதி மோசடி செய்து இருப்பு குறைவு பின்வருமாறு ஏற்படுத்தியுள்ளனர்.

01.04.2013 தேதியில் மருந்தக பிரிவில் ஆரம்ப இருப்பு (31.03.2013-ன் இருப்பு பரிசோதனை அறிக்கையின் படி ரூ.12,21,880/-. 01.04.2013 முதல் 30.09.2013 வரை ரொக்கம் மற்றும் கடன் கொள் முதல் மதிப்பு (GRN

CJM, MAYILADUTHURAI.

Report & Abstract)-ன் படி ரூ.34,33,839.10/-. 01.04.2013 முதல் 30.09.2013 வரை மளிகை கிடங்கு மூலம் சரக்கு மாற்றம் மருந்து பிரிவிற்கு செய்ததில் மதிப்பு (Debit Note & Abstract)-ன் படி ரூ.29,515/-. ஆகக் கூடுதல் வரவு ரூ.46,85,234.10/- 01.04.2013 முதல் 30.09.2013 வரை ரொக்க விற்பனை ரூ.22,28,322/-. ரொக்க விற்பனை கழிவு 12% (Cash Receipt, Sales Abstract & Discount) ரூ.3,29,947.88/-. 01.04.2013 முதல் 30.09.2013 வரை கடன் விற்பனை ரூ.25,618.64/-, கடன் விற்பனை கழிவு 12 % (Credit Bill & Abstract) ரூ.4,353.54/-. 01.04.2013 முதல் 30.09.2013 வரை கொள் முதல் திருப்பம் (Agency / விற்பனை பட்டியலின் படி பெற்ற கணினி அறிக்கை) ரூ.1,34,333.09/-. ஆக கூடுதல் செலவு ரூ.27,14,605.15/-. 30.09.2013 தேதியில் இறுதி இருப்பு இருக்க வேண்டியது ரூ.19,70,628.95/-. 30.09.2013 தேதியில் இறுதி தணிக்கைகாக இருப்பு சோதிக்கப்பட்டதன் மதிப்பு ரூ.15,74,599.47/-. 30.09.2013 தேதியில் இருப்பு குறைவு ஏற்படுத்தியது ரூ.3,96,029.48/-.

பண்டக சாலையின் மருந்தக பிரிவில் பணிபுரிந்த முதல் எதிரி மகாலெட்சுமி 01.04.2013 முதல் 30.09.2013 வரையிலான காலத்தில் வரவு செலவுக்கான பதிவேடுகளை சரியாக பராமரிக்காமல் கொள் முதல், விற்பனை மற்றும் கொள் முதல் திருப்பம் ஆகியவற்றில் வரவு செலவு கணக்கின் இருப்பு குறைவினை ஏற்படுத்தி உள்ளதற்கும், 2-ம் எதிரி செப்டம்பர் 2013 மாதத்தில் பணிபுரிந்து 30.09.2013-க்கான சரக்கு இருப்பு பரிசோதனைக்காக இருப்பு விபரம் எடுத்தும் பரிசோதனை அலுவலரிடம் ரூ.15,74,599.47/- மதிப்பிற்கு மருந்து பொருட்கள் பரிசோதனைக்காக முன்னிலைப்படுத்தியதை ஒப்புக் கொண்டும் 30.09.2013-ல்ல இறுதியாக இருக்க வேண்டிய கையிருப்பு தொகை ரூ.3,96,029.48/- பைசாவை கையாடல் செய்துள்ளனர். இக்குற்றத்தினை உறுதி செய்த 31.03.2013 மற்றும் 30.09.2013 தணிக்கை சரக்கு இருப்பு பரிசோதனை அறிக்கை, ரொக்க கொள்முதல் பட்டியல்கள், சரக்கு மாற்றம் செய்த பட்டியல்கள், கடன் விற்பனை, ரொக்க விற்பனை மற்றும் கழிவு பட்டியல்கள், விற்பனை தொகை செலுத்திய பட்டியல், கொள்முதல் திருப்பம் பட்டியல்கள்

CJM, MAYILADUTHURAI.

பதிவேடுகளுடன் மற்றும் மருந்து பெருவணிகர்களிடம் பெற்ற பிரிவு 81 விசாரணை வாக்குமூலங்கள் மற்றும் ரசீதுகள், முதல் மூன்று எதிரிகளிடம் பெற்ற வாக்குமூலங்கள் ஆகியவற்றையும் அனைத்து பட்டியல்கள் தொடர்பான Computer Abstract யுடன் என்னால் சமர்பிக்கப்பட்டுள்ளனர்.

5-வது இனத்தில் மயிலாடுதுறையில் உள்ள மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் மருந்தக பிரிவில் பணிபுரிந்த எதிரிகள் சித்ரா, ஆரேக்கியராஜ் ஆகியோர் 01.10.2013 முதல் 27.01.2014 வரையிலான காலத்தில் மருந்து பொருட்களின் கொள் முதல் மற்றும் இறுதி இருப்பில் நிதி மோசடி செய்து இருப்பு குறைவு பின்வருமாறு ஏற்படுத்தியுள்ளனர்.

01.10.2013 தேதியில் மருந்தக பிரிவில் ஆரம்ப இருப்பு (30.09.2013-ன் இருப்பு பரிசோதனை அறிக்கையின் படி ரூ.15,74,599.47/-. 01.10.2013 முதல் 27.01.2014 வரை ரொக்கம் மற்றும் கடன் கொள் முதல் மதிப்பு (GRN Report & Abstract)-ன் படி ரூ.22,42,689.06/-. 01.10.2013 முதல் 27.01.2014 வரை மளிகை கிடங்கு மூலம் சரக்கு மாற்றம் மருந்து பிரிவிற்கு செய்ததில் மதிப்பு (Debit Note & Abstract)-ன் படி ரூ.4,716/-. ஆகக் கூடுதல் வரவு ரூ.38,22,004.53/-. 01.10.2013 முதல் 27.01.2014 வரை ரொக்க விற்பனை ரூ.10,94,342/-. ரொக்க விற்பனை கழிவு 12% (Cash Receipt, Sales Abstract & Discount) ரூ.1,63,834.04/-. 01.10.2013 முதல் 27.01.2014 வரை கடன் விற்பனை ரூ.13,12,120.20/-, கடன் விற்பனை கழிவு 12 % (Credit Bill & Abstract) ரூ.18,120.25/-. 01.10.2013 முதல் 27.01.2014 வரை கொள் முதல் திருப்பம் (Agency / விற்பனை பட்டியலின் படி பெற்ற கணினி அறிக்கை) ரூ.18,588.40/-. ஆக கூடுதல் செலவு ரூ.14,26,044.89/-. 27.01.2014 தேதியில் இறுதி இருப்பு இருக்க வேண்டியது ரூ.23,95,959.64/-. 27.01.2014 தேதியில் துறை அலுவலர்கள் ஆய்வு குழுவால் சோதிக்கப்பட்ட சரக்கு இருப்பு மதிப்பு ரூ.21,30,036.85/-. 27.01.2014 தேதியில் இருப்பு குறைவு ஏற்படுத்தியது ரூ.2,65,922.79/-.

CJM, MAYILADUTHURAI.

பண்டக சாலையின் மருந்தக பிரிவில் பணிபுரிந்த எதிரிகள் இருவரும் கூட்டாக சேர்ந்து 01.10.2013 முதல் 27.01.2014 வரையிலான காலத்தில் வரவு செலவுக்கான பதிவேடுகளை சரியாக பராமரிக்காமல் கொள் முதல், விற்பனை மற்றும் கொள் முதல் திருப்பம் ஆகியவற்றில் வரவு செலவு கணக்கின் இருப்பு குறைவினை ஏற்படுத்தி 27.01.2014 தேதியில் இறுதியாக இருக்க வேண்டிய கையிருப்பு தொகை ரூ.2,65,922.79/- பைசாவை கையாடல் செய்துள்ளனர். இக்குற்றத்தினை உறுதி செய்த 30.09.2013 மற்றும் 27.01.2014 தேதிகளில் சரக்கு இருப்பு பரிசோதனை அறிக்கை, ரொக்க கொள்முதல் பட்டியல்கள், சரக்கு மாற்றம் செய்த பட்டியல்கள், கடன் விற்பனை, ரொக்க விற்பனை மற்றும் கழிவு பட்டியல்கள், விற்பனை தொகை செலுத்திய பட்டியல், கொள்முதல் திருப்பம் பட்டியல்கள் பதிவேடுகளுடன் மருந்து பெருவணிகர்களிடம் பெற்ற பிரிவு 81 விசாரணை வாக்குமூலங்கள் மற்றும் ரசீதுகள், முதல் இரண்டு எதிரிகளிடம் பெற்ற வாக்குமூலங்கள் ஆகியவையும் அனைத்து பட்டியல்கள் தொடர்பான Computer Abstract யுடன் என்னால் சமர்பிக்கப்பட்டுள்ளனர்.

காவல் துறை விசாரணையின் போது 01.04.2011 முதல் 31.03.2012 வரையிலும், 01.04.2012 முதல் 31.03.2013 வரையிலும், 01.04.2013 முதல் 30.09.2013 வரையிலும் உள்ள காலத்தில் மருந்தக பிரிவிற்கு வந்த மருந்துகளின் (Purchase Bill) கொள் முதல் பட்டியல்களை கொள் முதல் திருப்பம் செய்த பட்டியல்களுடன் (Purchase Retrun or Sales Return) ஒப்பீடு செய்ததில் ெ கூடுதல் தொகைகளின் கூட்டுப்புள்ளியில் வித்தியாசம் இருந்ததை சரி செய்து கொடுத்துள்ளேன். ஆகையால், பிரிவு 81 விசாரணை அறிக்கையில் மேற்படி காலங்களில் நான் தெரிவித்துள்ள இருப்பு குறைவு தொகைகள் தற்போது மாறுபட்டு வந்துள்ள உண்மையான இருப்பு குறைவு தொகைகளை தெரிந்து கொண்டேன். மேலும், 2-வது இனத்தில் 3-வது எதிரி நடராஜன் என்பவரும் சேர்ந்து இருப்பு குறைவு ஏற்படுத்தியுள்ளார் என்று எனது விசாரணை அறிக்கையின் பட்டியில் தவறாக உள்ளதை காவல் துறை விசாரணையில் நீக்கியுள்ளதை தெரிந்து கொண்டேன். மேலும் எனது விசாரணைக்கு ஆஜராகாத மருந்து பெரு

CJM, MAYILADUTHURAI.

வணிகர்களின் பட்டியலை விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டு சமர்பித்துள்ளதை காவல் துறை விசாரணையின் போது மருந்து வணிகர்கள் அனைவரும் விசாரிக்கப்பட்டுள்ளதையும் தெரிந்து கொண்டேன். ஆகவே எதிரிகளால் முதல் இனத்தில் இருப்பு குறைவு ஏற்படுத்தி ரூ.11,53,457.56/- மற்றும் 2-வது இனத்தில் இருப்பு குறைவு ஏற்படுத்தி ரூ.44,643.62/-. 3-வது இனத்தில் போலியான கடன் விற்பனை செய்து ரூ.1,98,000/-மும் 4-வது இனத்தில் இருப்பு குறைவு ஏற்படுத்தி ரூ.3,96,029.48/-. 5-வது இனத்தில் இருப்பு குறைவு ஏற்படுத்தி ரூ.2,65,922.79/-. ஆக கூடுதல் ரூ.45,58,053.45/- கையாடல் செய்துள்ளனர் என்பதை தெரிந்து கொண்டேன். வணிக குற்ற புலனாய்வு துறை போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரி ஆரோக்கியராஜ் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

CC. No. 242/2025 -ல் உள்ள எதிரி மகாலெட்சுமி தரப்பு குறுக்கு விசாரணை அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.